[2005 செப்டம்பர் 26

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது சேலம் மாநகராட்சி கிச்சிப்பாளையம் அருகே உள்ள எருமாபாளையத்தில் சேலம் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை சேமிப்புக் கிடங்கு செயல்பட்டு வருகிறது. மேற்படி சேமிப்புக் கிடங்கு நிரம்பி உள்ளதாலும், மேலும், தினந்தோறும் மாநகர்ப் பகுதிகளில் சேகரிக்கப்படும் 350 மெ. டன் குப்பைகளை மேற்கொண்டு சேமிப்புச் செய்ய இயலாத காரணத்தால், எருமாபாளையம் திடக்கழிவு, மேலாண்மைக் கிடங்கினை மாற்றம் செய்ய, தீவிர பரிசீலனையில் உள்ளது.

[குறிப்பு: ஓர் உறுப்பினரின் உரையில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். என்ன, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், சொல்லுங்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் செய்தியாளர் தாக்கப்பட்டது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். அறைக்கு வந்து பேசுங்கள். திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. என்னுடைய ஆய்வில் இருக்கின்றது.